# CANADA வாக்குகள்

## 2015 மத்திய அரசுத் தேர்த்தல் செய்தியறிக்கை:
## வறுமையைக் குறைத்தல்

## பிரச்சினை

**தற்போது 4.8 மில்லியன் கனேடியர் வறுமையில் வாழ்கின்ற போதும், வறுமையைக் குறைப்பதற்கு எந்தவிதமான தேசிய உத்தித் திட்டமும் இல்லாத ஒரே ஒரு G8 நாடாக கனடா தொடர்ந்தும் இருக்கின்றது.**

## நிலைமை

தனிநபர் ஒருவருக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) அடிப்படையில், உலகில் 15வது செல்வந்த நாடாக கனடா உள்ளது, இருந்தும்கூட, உயிர்வாழ்வதற்கான அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை, 7ல் ஒரு கனேடியருக்கு இருக்கின்றது. போதுமான வருமானம் கொண்ட, பாதுகாப்பான வேலை இல்லாததால், 4.8 மில்லியன் கனேடியர்களால் போதுமான வீட்டு வசதி, ஆரோக்கியப் பராமரிப்பு, பிள்ளைப் பராமரிப்பு மற்றும் போஷாக்கான உணவை அணுக முடியவில்லை.

வறுமை என்பது, போதுமான வருமானம் இல்லை என்பது மட்டுமன்று; கனேடியச் சமூகத்தில் முழுமையாகப் பங்கேற்பதிலிருந்து தனிநபர்களைத் தவிர்த்துவிடுகின்ற ஒரு ஒட்டுமொத்தமான அனுபவமாகவும் அது இருக்கின்றது. தரக்குறைவான வசிப்பிடம், பசி, மற்றும் போதுமான போஷாக்கின்மை, தடுக்கப்படக்கூடிய நலமின்மை மற்றும் நோய், நிரந்தரமற்ற வேலை, அதிக மன அழுத்தம் மற்றும் சமூகத்தில் தனித்துவிடப்படல், போதாமை உணர்வுகள், அபிவிருத்தி மற்றும் கற்றலுக்கு அதிகளவு வாய்ப்பின்மை, பாகுபாடு, இழுக்கு போன்றவற்றை வறுமையில் வாழும் தனிநபர்கள் அனுபவிக்கின்றனர் (அனைவருக்கும் கண்ணியம்: கனடாவுக்கான ஒரு தேசிய வறுமை எதிர்ப்புத் திட்டம்) (Dignity For All: A National Anti-Poverty Plan for Canada).

வாழ்வதற்குக் கட்டுப்படியாகாத ஒரு இடமாக கனடா மாறுகின்றது. வசிப்பிடம், உணவு, போக்குவரத்து, பிள்ளைப் பராமரிப்பு மற்றும் ஆரோக்கியப் பராமரிப்புச் செலவுகள் தவிர்க்க முடியாமல் அதிகரித்துள்ள போதிலும், பணவீக்கத்துடன் சரிசெய்யப்படும் போது, கனடா முழுவதுமான சராசரி குறைந்தபட்ச ஊதியம், 1975ல் இருந்த சராசரி குறைந்தப்பட்ச ஊதியத்தை விட ஒரே ஒரு சதம் மட்டுமே கூடவாக இருக்கிறது.

வறுமையைக் குறைக்கும் செலவை விட, வறுமையால் ஏற்படும் செலவு அதிகமானது. National Council of Welfareன் ஒரு அறிக்கையின்படி, வருடம் தோறும் $24 பில்லியனுக்கும் அதிகமான செலவு வரி செலுத்துபவர்களுக்கு வறுமையால் ஏற்படுகின்றது. மேலும், வசிப்பிடமின்மையால் ஏற்படும் மொத்தச் செலவு வருடத்துக்கு $7.05 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், வசிப்பிடமின்மையைக் கனடாவில் இல்லாமல் செய்வதற்கு ஒவ்வொரு வருடமும் அந்தச் செலவின் பாதி மட்டுமே தேவைப்படும். அத்துடன், 6 வயதுக்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகளில் $1ஐ முதலிடல், எதிர்காலச் செலவில் $9ஐ மேலதிகமாகச் சேமிக்கும்.

பிரிட்டிஷ் கொலம்பியா தவிர்ந்த, கனடாவின் அனைத்து மாகாணங்களும் பிரதேசங்களும் வறுமையைக் குறைத்தலுக்கான உத்தியொன்றை ஆரம்பித்திருக்கின்றன அல்லது உருவாக்கிக்கொண்டிருக்கின்றன. வறுமையைக் குறைப்பதற்கு, மத்திய அரசு மட்டத்தில் அர்த்தமுள்ள அர்ப்பணிப்பு தேவை என்பதே இந்த உத்திகளின் பிரதானமான சிறப்பம்சமாகவுள்ளது. வறுமையைக் குறைப்பதற்கென மாகாணங்களும் பிரதேசங்களும் உறுதிபூண்டுள்ள பெரும்பாலான பணிகளுக்கு, மத்திய அரசு மட்டத்திலான இணைந்த ஆதரவு கணிசமானளவில் தேவைப்படுகிறது.

வறுமையின் மூலத்தைத் திட்டமாக, உபாயமாக, அளக்கக்கூடிய வழிகளில் தீர்க்கும் தேசிய மட்டத்திலான வறுமை குறைப்பு உத்தியொன்று எங்களுக்குத் தேவை. இந்த உத்திகள், வறுமையால் பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளில் கவனம் செலுத்துகின்ற, அடையக்கூடிய இலக்குகளைக் கொண்டிருக்கும். வெளிப்படைத்தன்மை, பொறுப்புடைமை, முன்னேற்றத்தைத் தெளிவாகக் காட்டும் சுட்டிகள் போன்றவை, தேசிய வறுமை குறைப்பு உத்தியொன்றை வினைத்திறனுள்ளதாக்கும்.

## கேள்விகள்

1. கனடாவில் வறுமையைக் குறைப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகளை உங்களுடைய கட்சி பரிந்துரைக்கும்?

2. மாகாணங்கள், பிரதேசங்கள் மற்றும் மாநகரங்களுடன் இணைந்து கனடாவிலுள்ள வறுமையைக் குறைக்கும் தேசிய வறுமை குறைப்பு உத்தியொன்றை உங்களுடைய கட்சி ஆதரிக்கின்றதா?

## ஆதாரவளங்கள்:

**இந்தத் தொடர் பற்றிய மேலதிக தகவல்கள் மற்றும் கூடுதலான தரவுத்திரட்டுத் தாள்களுக்கு:** http://spno.ca/canada-votes-2015

இந்தத் தொடரைத் தயாரித்தவர்கள்: Canadian Council on Social Development, Community Development Council Durham, CommunityDevelopment Halton, Edmonton Social Planning Council, Saint John Human Development Council, Social Planning and Research Council ofBC, Social Planning and Research Council of Hamilton, Social Planning Council of Cambridge and North Dumfries, Social Planning Council of Kitchener-Waterloo, Social Planning Network of Ontario, & Social Planning Toronto.

**மொழிபெயர்ப்பு : MCIS மொழிச்சேவைகள் – இலாபகரமற்ற அமைப்பு**

**www.mcislanguages.ca**

தேர்தல் நாள்: ஒக்ரோபர் 19, 2015